International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 04 Issue: 03 July to September 2022 www.irjtsjournal.org

# இலங்கையின் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்: ஒரு சிறுபான்மைக் கண்ணோட்டம்

# The 2019 Presidential Election of Sri Lanka: A Minority Perspective

A. Kanneraj, *Senior Lecturer,*

*Dept. of Social Sciences, Faculty of Arts & Culture,*
*Eastern University, Sri Lanka.*

**Abstract:**

*The 2019 presidential election, when comparing to previous ones, seems to be different in many aspects. More importantly, this election has drastically changed the impacts of minority community votes as a deciding factor. This study sets this tendency as its study problem and aimed at analysing the trend in that presidential election in which minority community votes failed to decide the intended results.*

*This study is based on mixed methodological approach and primary and secondary data was gathered through the method. And descriptive analysis is used to analyse the data for discussing the findings of this study.*

*This study found that the current presidential election system permits the majoritarian ethnic community to decide the president without the support of minority community. And it also identified that present ethnic cleavages in the country's population have caused the change of this nature.*

*On the other hand, this study described that the democracy associated with majoritarian philosophy is not suitable for country like Sri Lanka which has disproportionate ethnic population distribution and also indicated that a misunderstanding of the majoritarian principle by the people of Sri Lanka is the reason for such tendency.*

*This study suggested to an amendment in the presidential electoral system so as to make a condition in which a certain proportion of minority votes should be obtained for a candidate to be elected as a president. And the study also recommends pluralistic democratic changes to protect minority interests in presidential election of the country.*

*This study further indicates that these changes have to be made with the consensus of the majoritarian ethnic people in the country. Otherwise, ethnic issue will be continuing for several years and the presidential electoral system may be the reason for the ethnic issue of the country.*

**ஆய்வுச்சுருக்கம்:**

*2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலானது பல்வேறு வகைகளிலும் கடந்த கால அனுபவங்களுடன் ஒப்பிடும்போது வித்தியாசமானதாக அமைந்திருந்தது. இவற்றில் முக்கியமானது, ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினரின் வகிபாகத்தை கேள்விக்கு உட்படுத்தியிருந்தமையாகும். இவ்விடயத்தினை ஆய்வுப் பிரச்சினையாகக்கொண்டு,''குறித்த தேர்தலில் ஜனாதிபதியினைத் தெரிவுசெய்வதில் சிறுபான்மை மக்களின் வகிபாகம் எவ்வாறு அமைந்திருந்தது'' என்பதனை அறிந்து கொள்வதனை நோக்கமாகவும் கொண்டு, இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*இவ்வாய்வானது, ஒரு கலப்பு ஆய்வு முறையியல் அணுகுமுறையினை அடிப்படையாகக் கொண்டது. இவ்விரு வகையான தகவல்களும்முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களில் இருந்து பெறப்பட்டுள்ளன.*

***இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு***

*இவ்வகையில் பெறப்பட்ட தரவுகள்விவரணப் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு, ஆய்வின் முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.*

*ஆய்வின் முடிவாக நடைமுறையில் இருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலானது பெரும்பான்மை இனத்தினரால் மாத்திரம் தனித்து ஜனாதிபதியினைத் தெரிவு செய்யப்படுவதற்கான சாத்தியப்பாடுகளைக்கொண்டுள்ளது. அதேவேளை, நாட்டில் நிலவுகின்ற இனரீதியான பிளவே இத்தகைய சூழ்நிலை ஏற்படுவதற்குக் காரணம் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.*

*மறுபுறம் பெரும்பான்மைத் தத்துவத்தினடிப்படையில் செயற்படும் ஜனநாயகமும் இலங்கை போன்ற சமாந்தரமற்ற வகையில் இனப்பரம்பலைக் கொண்டுள்ள நாடுகளில் இனரீதியான ஆதிக்கத்திற்கு சாதகமாக அமைந்துள்ளது.பெரும்பான்மைத் தத்துவத்தின் தவறான புரிதலே இலங்கை போன்ற நாடுகளில் இத்தகைய நிலைமைகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைவதினையும் இவ்வாய்வானது சுட்டிக்காட்டுகின்றது.*

*மேற்படி குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கு, ஜனாதிபதித் தெரிவில் சிறுபான்மையினரின் அபிப்பிராயங்களையும், வெற்றிபெறும் ஜனாதிபதி வேட்பாளர்ஒரு குறித்த விகிதாசார அளவில் பெற்றுக்கொள்ளுதல் அவசியம் என்கின்ற வகையில் தெரிவு முறையில் மாற்றங்களை ஏற்படுத்துதல் மற்றும்பன்மைத்துவ ஜனநாயகத்தின் அவசியத்தையும் இவ்வாய்வு பரிந்துரைகளாக முன்வைக்கின்றது.*

**திறவுச் சொற்கள்:** *ஜனாதிபதி தேர்தல், சிறுபான்மை மக்கள், பெரும்பான்மை மக்கள், தேர்தல் முறைமை, பிரதிநிதித்துவ முறைமை*

**அறிமுகம்:**

இலங்கையில் ஜனாதிபதி ஆட்சிமுறைமை அறிமுகப்படுத்தப்பட்டபோது இவ்வாட்சி முறைமை சிறுபான்மையினருக்குச் சாதகமானது என்கின்ற வாதம் முன்வைக்கப்பட்டது. குறிப்பாக 2015ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலானது இக்கூற்றிற்கு மகுடம் வைத்தாற்போல் அமைந்திருந்தது. ஆயினும், 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற எட்டாவது ஜனாதிபதித் தேர்தலானது,ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மை மக்களின் வகிபாகத்தை கேள்விக்குட்படுத்தியிருந்தது. இந்நிலைமை, சிறுபான்மை மக்களின் பங்களிப்பின்றியே ஜனாதிபதியொருவர் தெரிவுசெய்யப்பட முடியும் என்ற வாதப் பிரதிவாதத்தினை ஏற்படுத்தியிருந்தது. பொதுஜன பெரமுன கட்சிசார்பில் இத்தேர்தலில் போட்டியிட்ட கோட்டாபய ராஜபக்ஷதனது ஜனாதிபதி பதவிறேற்பின்முதலுரையில்,“சிங்கள பௌத்த வாக்குகளால் மட்டுமே ஜனாதிபதி ஆனேன்” எனக் குறிப்பிட்டிருந்தார் (BBC Tamil, 2019).

இங்கு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் இருவரும் சிங்கள இனத்தைச் சார்ந்தவர்கள். எனினும் கோட்டாபய ராஜபக்ஷ சிங்களத் தேசிய வாதத்தை முக்கிய கருப்பொருளாக முன்னிறுத்தியே பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களின் பெருவாரியான வாக்குகளைப் பெற்றிருந்தார். அதேவேளை சஜித் பிரேமதாசாவிற்கு சிறுபான்மை மக்களின் அமோக வாக்குகள் கிடைத்திருந்தது. இது இலங்கை மக்கள் இனரீதியாக இரு துருவங்களாகப் பிளவுபட்டிருப்பதைக் காட்டுகின்றது. அதேவேளை ஜனநாயக ஆட்சிமுறையினைப் பின்பற்றுகின்ற இலங்கையில், பெரும்பான்மையினரின் விருப்பு என்பதுபெரும்பான்மை இனத்தின் விருப்பாகத் திசைதிருப்பப்பட்டிருப்பதை 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் காணமுடிகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை:**

இலங்கை ஒரு பல்லின மக்கள் வாழுகின்ற நாடாகும். இப்பல்லின மக்கள் வாழும் நாட்டில் உருவாக்கப்படுகின்ற ஆட்சிமுறைமையானது பல்லின மக்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாகவே அமையவேண்டும் என்பது ஜனநாயக ரீதியாகப் பின்பற்றப்படுகின்றதொரு ஏற்பாடாகும். இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள அரசியலமைப்பின்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியினைத் தெரிவு

செய்வதற்கானதேர்தலகள் 1982, 1988, 1994, 1999, 2005, 2010, 2015 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில்இடம்பெற்றுள்ளன.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை சிறுபான்மை மக்களுக்கு சாதகமானதோர் ஆட்சிமுறையாகக் கருதப்பட்டது. குறிப்பாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியினைத் தெரிவு செய்வதற்காக முழு நாடும் ஒரு தனித்தேர்தல் தொகுதியாக மாற்றமடைவதால் பெரும்பான்மை மக்கள் பிரிந்து பல வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும் நிலை ஏற்படும். அதனால் பெரும்பான்மை மக்களின் வாக்குகள் பிரிந்து செல்ல நேரிடும்.இந்நிலையில்,சிறுபான்மைச் சமூகங்கள் ஓரணியில் நின்று வாக்களிக்கும் நிலை ஏற்படும்இதனால் ஜனாதிபதிப்பதவிக்கு போட்டியிடுபவர்களும்,இரண்டாம் முறைஇப்பதவிக்கு வர முயற்சிப்பவர்களும்சிறுபான்மையினரைப் புறக்கணிக்கவே முடியாதுஎன்ற நிலைமை தோன்றும். இதனால் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை சிறுபான்மை மக்களுக்கு சாதகமானது என்றேகருதப்பட்டது.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற எட்டாவது ஜனாதிபதித் தேர்தலானது, சிறுபான்மை மக்களின் ஆதரவின்றி நிறைவேற்று ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்பட முடியும் என்று வியாக்கியானப்படுத்தப்பட்டது(BBC Tamil, 2019). இந்நிலையில் பல்லின மக்கள் வாழும் இலங்கையில்,தேர்தல் மூலமாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஏழாவது நிறைவேற்று ஜனாதிபதி,பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மக்களால் மாத்திரம் தெரிவுசெய்யப்பட்டதாகக் கொள்ளமுடியுமா? அதில் உண்மைத் தன்மை உள்ளதா?என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பகுப்பாய்வும் ஆய்வின் முடிவும்:**

**பெரும்பான்மை இனத்தினரால் மட்டுந்தான் ஜனாபதி கோட்டாபாய ராஜபக்ஷதெரிவு செய்யப்பட்டார் என்பதன் உண்மைத் தன்மையினை அறிதல்**

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு மக்களால் தெரிவு செய்யப்படும் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியினையும், அவரது வழிகாட்டலின் கீழ் செயற்படும் பாராளுமன்றத்தினையும் அறிமுகம் செய்திருந்தது. ஜனாதிபதியானவர் நாட்டில் வாழும் சகல மக்களினாலும் தெரிவு செய்யக்கூடியவராக இருப்பதால் சிறுபான்மை மக்களின் நலன்களைக் குறைந்த மட்டத்திலாவது பேணக்கூடியவாக இருப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித் தேர்தலில் ஏழாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகக் கோட்டாபய ராஜபக்ஷ 52.25 வீதமான வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றிருந்தார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட சஜித் பிரேமதாசா 41.99 வீதமான வாக்குகளைப் பெற்றிருந்தார். இது ஏறக்குறைய 10 வீதமான வாக்கு வித்தியாசமாகும். கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் நுவரேலியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய 16 மாவட்டங்களிலும் பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இத்தேர்தலில் சராசரியாக நூற்றுமுப்பத்து மூன்று இலட்சம்பேர் (13,300,000) வாக்களித்திருந்தனர். அவர்களில் அறுபத்தென்பது இலட்சம்பேர் (6,900,000) கோட்டாபய ராஜபக்ஷவிற்கும், அறுபத்தி நான்கு இலட்சம் பேர் (6,400,000) ஏனையவர்களிற்கும் வாக்களித்திருந்தனர் (தேர்தல்கள் ஆணைக்குழு). இவ்வெற்றியினைத் தொடர்ந்து சிறுபான்மைச் சமூகங்களிற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் வெற்றியில் உரிமை இல்லை என்கின்ற வகையில் கருத்துக்கள் பரவலாக முன்வைக்கப்பட்டன.

ஜனநாயக நாடொன்றில் தனக்கு விருப்பமான ஒரு வேட்பாளரைத் தெரிவு செய்வதற்காகவே வாக்களிக்கின்ற உரிமை வழங்கப்படுகின்றது. ஆனால் தேர்தல் முடிவினை அடிப்படையாகக் கொண்டு இனரீதியாக மக்கள் பாகுபடுத்தப்படுவது ஜனநாயகத்திற்கு விரோதமான ஒரு செயற்பாடாகும்.

உண்மையில், வெற்றி பெற்ற கோட்டாபய ராஜபக்ஷவிற்கு சிறுபான்மை மக்கள் வாக்களிக்கவில்லையா? என்பதன் உண்மைத் தன்மையினைத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்ய முற்படின், அதனைப் பின்வரும் தரவுகளின் அடிப்படையில் பகுப்பாய்விற்கு உட்படுத்த முடியும்.

2019 ஆண்டு நடைபெற்ற தேர்தலில், குறிப்பாக சிறுபான்மை இனங்கள் வாழுகின்ற மாட்டங்களில் வாக்களிப்பானது பின்வருமாறு அமைந்திருந்தது.

| மாவட்டம் | கோட்டாபய ராஜபக்ஷ | | சஜித் பிரேமதாசா | |
|---|---|---|---|---|
| அம்பாறை | 135,058 | 32.8% | 259,673 | 63.09% |
| திருகோணமலை | 54,135 | 23.39% | 166,841 | 72.10% |
| மட்டக்களப்பு | 38,460 | 12.68% | 238,649 | 78.70% |
| நுவரேலியா | 175,823 | 63.87% | 277,913 | 58.28% |
| யாழ்ப்பாணம் | 23,261 | 6.24% | 312,722 | 83.86% |
| வன்னி | 26,105 | 12.27% | 174,739 | 82.12% |

மூலம்:தேர்தல்கள் ஆணைக்குழு

இலங்கையில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் சிறுபான்மை மக்கள் செறிந்து வாழ்கின்றார்கள். மேலுள்ள அட்டவணையின் பிரகாரம் வடக்கில் கோட்டாபய ராஜபக்ஷ 49, 366 வாக்குகளைப் பெற்றுள்ளார். கிழக்கில், கோட்டாபய ராஜபக்ச 227, 653 வாக்குகளைப் பெற்றுள்ளார். கிழக்கில் அம்பாறை தேர்தல் தொகுதி (89, 674) மற்றும் திருகோணமலையில் சேருவில் தேர்தல் தொகுதி (31, 303) ஆகிய தொகுதிகள் பெரும்பான்மை சிங்கள மக்கள் வாழுகின்ற தேர்தல் தொகுதிகளாகும். இவ்விரு தொகுதிகளின் மொத்த வாக்கு 120,977 வாக்குகள் ஆகும். இதனடிப்படையில் வடக்கு மற்றும் கிழக்கில் சிறுபான்மையினரால் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அளிக்கப்பட்ட வாக்குகள் 156,042 ஆகும்.இது தவிர மலையகப் பகுதியை எடுத்துக் கொண்டால் இங்கு சுமார் 150,000 மேற்பட்ட மலையக மக்களின் வாக்குகள் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அளிக்கப்பட்டுள்ளன. எனவே மூன்று இலட்சம் சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெற்றுள்ளார். இவ்வாக்குகளும் கோட்டாபய ராஜபக்ஷ பெற்றவாக்குகளுக்குள் உள்ளடங்கும். எனவே, சராசரியாக 69 இலட்சம் வாக்குகளுக்குள் மூன்று இலட்சம் வாக்குகளைக் கழித்துப் பார்த்தால் 66 இலட்சம் வாக்குகளைத்தான் கோட்டாபய ராஜபக்ச பெற்றிருக்க முடியும். இதனடிப்படையில் 49.51 வீதமான வாக்குகளையே ராஜபக்ச பெற்றிருக்க முடியும். அதாவது முதல் சுற்றில் யாரும் வெற்றி பெற்றிருக்க முடியாத நிலையே ஏற்பட்டிருக்கும். இப்படி இருக்கும் போது சிறுபான்மையினரின் பங்களிப்பின்றி கோட்டாபய ராஜபக்ச வெற்றி பெற்றிருந்தார் என்பது தவறானதொரு தோற்றப்பாடாகும். ஏனெனில், அவ்வாறு சிறுபான்மை மக்கள் வாக்களிக்காமல் விட்டிருந்தால் கோட்டாபய ராஜபக்ச வெற்றிக்குத் தேவையான 50 வீதமும் ஒரு வாக்கினையும் பெற்றுக்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டிருக்கும்.

**இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை பெரும்பான்மை இனத்தினரால் மாத்திரம் தெரிவு செய்யப்படும் போது, ஏனைய சிறுபான்மை இனங்கள் எதிர்கொள்ளும் சவால்கள்**


ஜனாதிபதி தமது பதவியேற்பினை ருவன்வெசேய என்னும் இடத்திலேயே செய்திருந்தார். இவ்விடமானது எல்லாளனை (தமிழ் மன்னனை) வெற்றிகொண்ட துட்டகைமுனுவினால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதனை தனது பதவியேற்பிலும் ஜனாதிபதி கோட்டாபய குறிப்பிட்டிருந்தார்.இவ்விடத்தின் தெரிவானது சிறுபான்மை மக்களுக்கானதொரு அச்சுறுத்தலாக அல்லது பொரும்பான்மை மக்களின் பாதுகாவலனாகத் தன்னை வெளிப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகவே பார்க்கமுடியும் (மாணிக்கவாசகம், பி. 2020).

ஜனாதிபதி தேர்தலில் தனக்குக் கிடைத்த பெரும்பான்மை வாக்குகளைத் தனக்குக் கிடைத்த ஆணையாகக் கொண்டு செயற்படுவராயின், சிறுபான்மை மக்களின் அரசியல் எதிர்காலம் முரண்பாடுகளுக்கு மத்தியில் நகர்ந்து செல்வதாக அமையும். ஏனெனில்,“சிங்கள வாக்குகள், பௌத்த வழியிலான ஆட்சி” என்றவிடயங்களை முன்னிறுத்தி தனது செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது, பேரினவாதிகள் சிறுபான்மையினருக்கு எதிராகச் செயற்படுவதற்கான அழுத்தத்தினைக் கொடுப்பர். இதனடிப்படையில் ஜனாதிபதி செயற்பட முற்படின் அவர் சர்வதேச ரீதியாக அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியதொரு நிலை ஏற்படும். இதனைப் பேராசிரியர் ஜயதேவ உயன்கொடவும் தனது ஆய்வில் குறிப்பிட்டிருந்தார்(Jayadeva, 2019).

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியேற்பு நிகழ்வில் “பெரும்பான்மை மக்களின் பெரும்பான்மை வாக்குகளினாலேயே நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். தமிழர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் நான் முன்னர் அழைப்பு விடுத்தேன். ஆனால், எனக்கு அதரவு வழங்கவில்லை” என்று குறிப்பிட்டிருந்தார்(வெளிநாட்டமைச்சு,2019). இது பெரும்பான்மை சிங்கள் மக்களினால் தான் தெரிவு செய்யப்பட்டமையால், அம்மக்களுக்கு விசுவாசமாகச் செயற்படுவதையே சுட்டிக்காட்டுகின்றது. தேர்தலில் தன்னுடன் இணையுமாறு விடுத்த வேண்டுகோளை சிறுபான்மை மக்கள் ஏற்காமை தொடர்பில் கவலை வெளியிட்டிருந்த ஜனாதிபதி எவ்வாறாயினும், ஜனாதிபதி என்றவகையில் அனைத்து மக்களினதும் ஜனாதிபதியாகவே செயலாற்றுவேன் எனக் குறிப்பிட்டிருந்தார் (வெளிநாட்டமைச்சு இலங்கை, 2019). ஆயினும் தனது கொள்கை விளக்கவுரையில் சிறுபான்மை மக்கள் தொடர்பிலோ அவர்களது அரசியல் தீர்வு விடயங்கள் தொடர்பிலோ எதுவும் குறிப்பிடவில்லை. மாறாக, தேசிய பாதுகாப்பிற்கு அதிமுக்கியத்துவம் அளிக்கப்படும், பௌத்த மதம் முதன்மை நிலையில் பேணப்படும் என்பதனை ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை விளக்கவுரையில் குறிப்பிட்டிருந்தார்.அதேவேளை சிறுபான்மை இன மக்கள் பெரும்பான்மை இன மக்களின் விருப்பங்களை ஏற்று அதற்கேற்ற வகையில் செயற்பட வேண்டும்.இதன்மூலம் தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். இவ்விடயம் சிறுபான்மை மக்களின் அரசியல் அபிலாசைகளைத் தான் கண்டுகொள்ளப்போவதில்லை என்பதை குறித்துக் காட்டும் வகையிலேயே பார்க்கப்படுகின்றது(மாணிக்கவாசகம், 2020).

ஜனாதிபதித் தேர்தல் முடிவினை பார்க்கின்ற போதும், ஒரு விடயம் தெளிவாகத் தெரிகின்றது. அதாவது இலங்கை இனரீதியாக இரண்டாகப் பிளவுபட்டிருக்கின்றது என்பதாகும்.

**இலங்கையில் இனரீதியாக பிளவுபட்டுபட்டிருக்கும் வாக்களிப்பு**




மூலம்: விக்கிபீடியா



© 2022, IRJTSR 

தேர்தல் முடிவுகளை வெளிப்படுத்தும் வரைபடம், விடுதலைப்புலிகள் காலத்தில் வரையப்பட்ட ஈழத்திற்கான வரைபடத்தை ஒத்ததாக இருக்கின்றது. அதாவதுஇலங்கை இனரீதியாகப் பிளவுபட்டிருப்பதையே காட்டுகின்றது. பேராசிரியர் ஜயதேவ உயங்கொட தனது ஆய்வில் தேர்தல் முடிவுகள் இலங்கை இன்னும் இனரீதியாக பிரிவுபட்டுள்ளதைக் காட்டுவதாகக் குறிப்பிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது(Jayadeva, 2019). 2009 ஆம் ஆண்டிற்குப் பின்னரான ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ் மக்களின் வாக்குகள் இவ்வாறுதான் அமைந்திருந்தன. இங்கு கவனிக்க வேண்டிய இன்னுமொரு விடயம் மேற்குறித்த இரு தடவைகளிலும், ஏறக்குறைய சிறுபான்மை மக்கள் ராஜபக்ஷக்களிற்கு எதிராகவே வாக்களித்திருந்தனர்.

2019 ஆண்டு இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் வாக்களிப்பு வீதத்தினை 2015 ஆம் ஆண்டு வாக்களிப்பு வீதத்துடன் ஒப்பீட்டுப் பார்க்கும்போது, 2019 ஆம் ஆண்டில் ஒட்டு மொத்தமாக 2.47 வீதமான வாக்களிப்பு அதிகரிப்பு, இலங்கை பூராகவும் நோக்குகின்ற போது ஏற்பட்டிருப்பதனைக் காணலாம். இதனைப் பின்வரும் அட்டவணை மூலம் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

**2015 மற்றும் 2019 ஆண்டுகளில் ஜனாதிபதித் தேர்தலில் ஒப்பீட்டடிப்படையிலான வாக்களிப்பு**

| இல | தேர்தல் மாவட்டம் | 2015 | 2019 |
|---|---|---|---|
| 01. | அனுராதபுரம் | 83.10 | 86.25 |
| 02. | பதுளை | 82.99 | 82.32 |
| 03. | **மட்டக்களப்பு** | **70.97** | **82.32** |
| 04. | கொழும்பு | 82.67 | 82.97 |
| 05. | **திகாமதுல்லை** | **77.39** | **77.20** |
| 06. | காலி | 83.49 | 87.11 |
| 07. | கம்பகா | 82.88 | 85.89 |
| 08. | அம்பாந்தோட்டை | 84.13 | 87.40 |
| 09. | **யாழ்ப்பாணம்** | **66.28** | **85.15** |
| 10. | களுத்துறை | 84.73 | 85.93 |
| 11. | கண்டி | 82.63 | 84.89 |
| 12. | கேகாலை | 83.60 | 85.30 |
| 13. | குருணாகல் | 82.98 | 85.06 |
| 14. | மாத்தறை | 83.36 | 83.31 |
| 15. | மாத்தளை | 82.35 | 85.71 |
| 16. | மொனராகலை | 83.75 | 82.82 |
| 17. | நுவரேலியா | 81.27 | 68.03 |
| 18. | பொலன்னறுவை | 83.94 | 76.59 |
| 19. | **புத்தளம்** | **73.81** | **85.76** |
| 20. | இரத்தினபுரி | 84.90 | 85.92 |
| 21. | **திருகோணமலை** | **76.76** | **76.53** |
| 22. | **வன்னி** | **72.57** | **85.24** |
| | மொத்த வாக்களிப்பு | **81.25** | **83.72** |

மூலம்: தேர்தல்கள் ஆணைக்குழு

இவற்றில் குறிப்பாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மற்றும் வன்னி ஆகிய மாவட்டங்களிலேயே 10 வீதத்திற்கும் அதிகமான அதிகரித்த வாக்குவீதம் முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகின்றபோது ஏற்பட்டிருக்கின்றது. இங்கு குறிப்பிடக் கூடிய விடயம் யாதெனில், மேற்படி மாவட்டங்கள் சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மாவட்டங்களாகவே உள்ளன. எனவே இதன் மூலம் அறிகின்ற விடயம் யாதெனில், பெரும்பான்மை மக்களின் வாக்களிப்பு வீதம் முன்னய வருடத்துடன் ஒப்பிடுகையில் அதிகரிக்கவில்லை.

அவ்வாறாயின் பெரும்பான்மை மக்களின் வாக்குகளில் 70 வீதத்திற்கும் அதிகமானவை வெற்றிபெற்ற ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவிற்கே அளிக்கப்பட்டுள்ளன என்பதாகும். இதற்குக் காரணம், நல்லாட்சியின் பலவீனம், ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னர் ஏற்பட்ட தேசிய பாதுகாப்பு தொடர்பில் பலமான தலைமைத்துவத்தின் தேவை மற்றும் 2015 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ சிறுபான்மை மக்களினால் தோற்கடிக்கப்பட்டமைக்கான பழிதீர்ப்பு என்பனவற்றைக் குறிப்பிட முடியும். இவைதவிர, வியத்கம, எலிய போன்ற அமைப்புக்கள் பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றியடையச் செய்வதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டிருந்தன(மாணிக்கவாசகம்,2020). இவை தனித்து சிங்கள் மக்களின் வாக்குகளால் கேட்டாபயவின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் செயற்பட்டுக் கொண்டிருந்தன.

வடகிழக்கில் 80 வீதத்திற்கும் அதிகமான மக்கள் சஜித் பிரேமதாசாவிற்கே வாக்களித்திருந்தனர். அதன் முலம் அறிகின்ற விடயம், யாரைத் தெரிவு செய்யவேண்டும் என்பதைவிட, யாரை நிராகரிக்க வேண்டும் என்பதில் வடகிழக்கு மக்கள் தெளிவாக இருந்தார்கள் என்பதாகும். ஏனெனில், சஜித் பிரேமாதாசாவின் கொள்கையினை ஏற்றுக்கொண்டதால்தான் இவ்வாக்குகள் அளிக்கப்பட்டிருக்கவில்லை.இறுதியுத்தத்தில் நேரடி பங்குதாரர்களை தமிழ் மக்கள் இன்னும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதே இதன் வெளிப்பாடாகும்.

ஜனாதிபதித் தேர்தலானது இலங்கை முழுவதையும் ஒரு தேர்தல் தொகுதியாகக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது. எனவே, இலங்கையின் விகிதாசாரத்திற்கமைய சிங்களவர் 74.9 வீதம், இலங்கைத் தமிழர் 11.2 வீதம், இந்தியத் தமிழர் 4.1 வீதம், இலங்கை முஸ்லீம்கள் 9.3 வீதம், வேறு 0.5 வீதம் (குடிசனத் தொகை மதிப்பீடு 2012) ஆகும். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதற்கு பெரும்பான்மை மக்களின் வாக்குகளே போதுமானது என்பதனை அவர்கள் முன்னரே கணிப்பிட்டிருந்தனர். இதற்கான படிப்பினையினை 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் வழங்கியிருந்தது. இதற்கமைய 2019 ஆம் ஆண்டு தேர்தலில் இது நிருபிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இது அரசியல் ரீதியாக சிறுபான்மையினர் முன்னிலைப்படுத்தப்படவோ, பேரம் பேசக்கூடிய தேவையோஇல்லை என்பதைக் காட்டுகின்றது.

குறிப்பாக புதிய ஜனாதிபதி பதவியேற்றதன் பிற்பாடு சிறுபான்மை மக்களைப் புறக்கணிக்கின்ற செயற்பாடுகள் ஒருவருட காலத்திற்கு உள்ளேயே பல சந்தர்பங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவையாவன: பௌத்தத்திற்கும், பேரினவாதத்திற்கும் முன்னுரிமை அளிக்கின்றமை,சுதந்திர தினவிழாவில் தமிழில் தேசிய கீதம் பாடப்படாமை, கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணியில் எந்தவொரு சிறுபான்மை மக்களையும் நியமிக்காமை, அமைச்சுக்களின் செயளாளர்களின் நியமணத்தில் தமிழர்கள் புறக்கணிப்பு, நில ஆக்கிரமிப்புக்கள் மற்றும் முஸ்லீக்களின் ஜனாசா எரிப்பு ஆகிய விடயங்களைக் கண்டுகொள்ள முடியும். இதன்மூலம் சிறுபான்மை மக்கள் அரசியல் ரீதியாக ஒதுக்கப்படுகின்றமையினைக் காணமுடிகின்றது.

**முடிவுரை:**

இலங்கையில் இதுவரையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலிருந்து 2019 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலானது சற்று மாறுபட்டதாகவே அமைந்திருக்கின்றது. ஏனெனில்,இத் தேர்தலில் ஜனாதிபதியினைத் தெரிவுசெய்வதில் சிறுபான்மையினர் தீர்க்கமானவர்கள் என்பது கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றது.

மறுபுறம் பெரும்பான்மையினரின் விருப்பினடிப்படையில் ஜனநாயக ஆட்சிமுறைமை என்பதும் கேள்விக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது. இங்கு பல்லின மக்கள் சமாந்தரமற்ற வகையில் இனத்துவப் பரம்பலைக்



© 2022, IRJTSR 

கொண்டிருக்கின்றபோது, பெரும்பான்மைத் தத்துவமே ஜனநாயகத்தின் அடித்தளம் என்பது கேள்விக்குட்புடுத்தப்பட்டிருக்கின்றமையினை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் தொடர்பான கோட்பாட்டின் அடிப்படையில் நோக்குவோமாயின்,"முழுப் பிரஜைகளினதும் செல்வாக்கின் மூலமாக தெரிவு அல்லது பிரஜைகளின் ஒரு பகுதியினர், தங்களிலிருந்து அங்கத்தவர்களைத் தெரிவு செய்து கொள்வதன் மூலமாக அரசாங்கச் செயற்பாட்டிற்கான அனுமதியினை வெளிப்படுத்தல்"எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இங்கு பல இனமக்கள் வாழும் நாட்டில், தங்களிடையேயான பிளவுகளின் அடிப்படையில் பிளவுபட்டுக்காணப்படும்போது முழுப் பிரஜைகள் அல்லது பிரஜைகளில் ஒரு பகுதியினர் என்பது பெரும்பான்மையாகக் கொள்ளப்படாமல், பெரும்பான்மை இனத்தினர் தனித்து நின்று தமக்கான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். இதனால் சிறுபான்மை இனமக்கள் ஒன்றில் தமக்கான அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்ளத் தவறுகின்றனர் அல்லது அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டவர்களால் அடக்கப்படுகின்றனர். எனவே பிரதிநிதித்துவம் தொடர்பான மேற்படிக் கோட்பாடு இலங்கைபோனற நாடுகளுக்குப் பொருத்தப்பாடானதாகக் காணப்படவில்லை.

இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதியினைத் தெரிவு செய்வதற்காக, நடைமுறையில் இருக்கின்ற தேர்தல்முறையானது குறைபாடுடையதாகவேகாணப்படுகின்றது. ஒன்றில் குறித்த தேர்தல் முறையில், சிறுபான்மையினரின் வகிபாகத்தினை கட்டாயப்படுத்துகின்ற வகையில் மாற்றத்தினைக் கொண்டு வருதல். அல்லது சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கும் வகையில் துணை ஜனாதிபதி முறைமையுடன் சேர்ந்த வகையில் புதிய மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளுதல்.மற்றையதுபிரதிநிதித்துவம் தொடர்பான கோட்பாடுகள் இலங்கை போன்ற சமாந்தரமற்ற வகையில் இனவிகிதாசாரத்தைக் கொண்ட நாடுகளில் சிறுபான்மையினரின் விருப்பினையும் விகிதாசாரத்திற்கு ஏற்றவகையில் பிரதிபலிக்கும் வகையில் அமையவில்லை.

மேற்படி விடயங்களில் கவனம் செலுத்தப்படுவது இலங்கை போன்றதொரு நாட்டிற்கு கட்டாயமானதாகும். ஏனெனில், இலங்கையில் கடந்த பலவருடங்களாக இனமுரண்பாடு உள்நாட்டு யுத்தம் நடைபெற்று முடிவிற்கு கொண்டுவரப்பட்டிருந்தாலும் இனரீதியான சந்தேகங்களும் இனமுரண்பாடுகளும் தொடர்ந்துகொண்டே செல்கின்றன. இந்த நிலையில் எதிர்காலத்தில் இனமுரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கும் மேற்குறித்த மாற்றங்கள் அவசியமானதாகும்.

**உசாத்துணை நூல்கள்**


[1] Jay. S, 2015, *Politics, Power and Purpose: An Orientation to Political Science*, [Online] FHSU Digital Press, URL Available on: https://fhsu.pressbooks.pub/orientationpolisci/

[2] Jayadeva. U, 2019, *Sri Lanka's Presidential Election: Healing the wound in the new Task*, URL Available on: https://groundviews.org/2019/11/19/sri-lankas-presidential-election-healing-the-wounds-is-the-new-task/

[3] Misha K, 2019, *Sri Lanka: Gotabays Rajapakasa's election victory sparks fear among minorities*, URL Available on: https://theconversation.com/sri-lanka-gotabaya-rajapaksas-election-victory-sparks-fear-among-minorities-127302

[4] Oguz. H, Sefa. C & Erol. T, 2019, *Pluralism and Democratic Theories: Fundations and Challenges*, URL Available on: https://www.researchgate.net/ publication/

[5] Vaihaishelvan,2019,*People in a democrative election!*,Dinamani,URLAvailable from: https://www.dinamani.com/editorial-articles/center-page-articles/2019/

[6] Rahuman,2019,*The contribution of the minority population to this victory of the president election*,URL Available on: https://www.madawalaenews.com/search?updated-max=2019-11-23T09:45:00% 2B05: 30&max-results=25&m=1

[7] Manihavasaham, 2020,*An End to the miniority issue*,URLAvailable on:http://aruvi.com/article/tam/2020/01/06/6332/

[8] Foreign Ministry of Sri Lanka, 2019,Gotabaya Rajapaksa becomes the President of Sri Lanka, URLAvailable on: mfa.gov.lk/tam/